REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 18உ வெள்ளி (3—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 19உ சனி (4—12—54) [இதழ் 148

## பக்தூனிஸ்தான் உதயம்!

கராச்சி ஆட்சியிலிருந்து விடுபட்டு, வட மேற்கு எல்லைப்புற மாநிலம், விரைவில் பக்தூனிஸ்தானின் ஒரு அங்கமாக அமையப்போகிறது என இப்பிப்பக்கிரி அவர்கள் இந்தியாவில் உள்ள பக்தூன் இயக்கத் தலைவர் கான் காஜி காபூலிக்குத் தந்தி அடித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தத் தந்தி 'ஆஜாத் பக்தூனிஸ்தானி' (விடுதலை பெற்ற பக்தூனிஸ்தான்) லிருந்து கொடுக்கப்பட்டுள்ளதாம்

# 'வேலையின்மையைத் தொலைக்க ரூ. 20,000 கோடி தேவை'

## 'ஏழு கோடி பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்'

## 'ஐந்தரை கோடி மக்களே அதற்குப் போதுமானது'

## 'ஒன்றரை கோடி நபர்களுக்கு வேறு தொழிலைக் காட்ட வேண்டும்'

திட்டக் குழுத் துணைத் தலைவர் கூறும் விளக்கம்

புதுடெல்லி, டிச. 2—

"நாட்டில் இருந்து வரும் வேலையின்மையைக் களைவதற்கு ரூ. 18,000 கோடி முதல் ரூ. 20,000 கோடி வரையில் பிடிக்கும்."

"இங்கு, விவசாயத்தை நம்பி வாழ்கிறவர்கள் மொத்தத்தில் 7 கோடி நபர்கள் உள்ளனர். அவர்களில் விவசாயத்திற்குத் தேவைப்படுகிறவர்கள் தொகை 5½ கோடியேயாகும். அத்தொழிலில் அதிகப்படியாக உள்ள 1½ கோடி மக்களை, வேறு தொழில்களில் ஈடுபடுத்த வேண்டும்,"

—இவ்வாறு, திட்டக் குழுவின் துணைத் தலைவரான வி. டி. கிருஷ்ண மாச்சாரியார், டெல்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கவுடல்லியர் சங்கத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார். மேலும் அவர் சொன்னார்:—

"கிராமப் பகுதிகளில் பயங்கரமான வேலையின்மை இருந்து வருகிறது. இங்குள்ள 5 லட்சம் கிராமங்களில் 28 கோடி மக்கள் வசித்து வருகின்றனர். பயிர் செய்வதற்காக உள்ளதோ 25 கோடி ஏகர் நிலம்தான். அவைகளில் 5 கோடி ஏகர் நிலத்திற்குத்தான் நீர்ப்பாசன வசதி இருந்து வருகிறது.

"பருவ காலத்தில் மட்டும் தான் அவர்கள் பயிர்த் தொழிலில் ஈடுபடுகிறார்கள். அவர்களில் நான்கில் மூன்று பகுதியினர் மூன்று முதல் நான்கு மாதம் வரையிலும், நான்கில் ஒரு பகுதியினர் ஆறு முதல் எட்டு மாதங்கள் வரை பாடுபடுகிறார்கள். மற்ற காலங்களில் அவர்கள் வேலை எதுவும் இன்றி காலங் கழிக்கின்றனர். இதன் பலனாக கிராமங்களில் உள்ள 80 சதவிகித மக்கள், தேசிய வருமானத்தில் 50 சதவிகிதத்தைத்தான் உற்பத்தி செய்கிறார்கள்.

# நடிகர் குழுவினர் வீட்டில் நுழைந்து கொள்ளை

## 24 நகர போலீஸ், 25 ஆயுதபோலீஸ் படையினருக்குக் கல்லடி

## ஒரு சார்ஜென்ட், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு சப்-மாஜிஸ்திரேட் ஆகியோருக்கும் காயம்

சத்தியாக்கிரகப் போர்வையில் இந்துமகாசபையினர் திருவிளையாடல்

மதுரை, டிச. 2—

'இராமாயண' நாடகம் இரவு பத்து மணிக்குத் துவங்கப்படுவதாக இருந்தும்கூட, நான்கு மணிக்கு முன்னதாகவே இந்து மகா சபையைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாக வந்து, கொட்டகை முன்னர் கூடினர். அங்கிருந்த போலீஸ் அதிகாரிகள், அவர்களைக் கொட்டகையிலிருந்து நூறு அடி தொலைவில் நிற்கும்படி அறிவித்தனர்; ஆனால், இருள் சூழச் சூழ 8-15 மணிக்கு, கொட்டகையில் டிக்கெட் விற்கும் பகுதியை மேற்படி இந்து மகா சபையினர் அணுகினர். நாடகம் பார்ப்பதற்காக டிக்கெட் வாங்க வரிசையில் நின்றுகொண்டிருந்த பொதுமக்களைத் தாக்க முனைந்தனர்.

நாடகக் கொட்டகை மீதும், டிக்கெட் வாங்க நின்றுகொண்டிருந்த பொதுமக்கள் மீதும் அத் 'தொண்டர்' குழாம் கற்களை வீசத் தொடங்கியது. போலீஸ்எச்சரிக்கை பயனளிக்காமல் போய்விட்டது.

இதற்கிடையில் ஆஸ்தீக சிகாமணிகள் எனக் கூறிக் கொண்டு சிலர், தீவட்டிகளையும், பட்டாசுக் கட்டுகளையும் எடுத்துக்கொண்டு அக்கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து கொண்டு, போலீஸ் அணியை உடைத்துக் கொட்டகைக்குள் நுழைய முயற்சித்தனர். மேலும் இரண்டு 'தொண்டர் கூட்டமும்' வந்து கலந்தன.

இத்தகையக் 'கிளர்ச்சி'கள் அனைத்திலும், முன்னுள்'

(4-ம் பக்கம் பார்க்க.)

## குறுக்கெழுத்து போட்டி

சென்னை, டிச. 2—

'குறுக்கெழுத்துப் போட்டிகளையும், அவை போன்றவற்றையும் அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று, சென்னை மாநிலத்தின் கருத்தை மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து விட்டோம்' என்று நிதி மந்திரி மேல்சபையில் தெரிவித்திருக்கிறார்.

## தாக்கல் செய்துவிட்டனர்

நாகர்கோவில், டிச. 2—

திரு-தமிழக 'விடுதலை தின'த்தன்று கடந்த ஆக. 11-ல் நடைபெற்ற சம்பவங்களை யொட்டி, திரு. குஞ்சன் நாடார், எம்.எல்.ஏ., உட்பட, 77 பேர்கள்மீது இறுதி குற்றப் பத்திரிக்கையை விளவங்கோடு போலீசார் குழித்துறை நீதிபதி முன் இன்று தாக்கல் செய்துவிட்டனர் எனத் தெரிகிறது.

இந்தியாவில் மின்சார விளக்குகள் உற்பத்தி 1951-52-ல் 140 லட்சமாக இருந்தது, 1953-54ல் 198 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

## தமிழ் ஆட்சி மொழி

சென்னை, டிச. 3—

நேற்று சென்னை மேல் சபையில் பேசிய திரு. கெஜபதி எம். எல். சி., அவர்கள், கவர்னரின் உரை பற்றிக் குறிப்பிடுகையில், குறிப்பிட்டதாவது:—

"சர்க்கார் மீண்டும் ஒருமுறை தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டுமென்கிற மக்களின் கோரிக்கையைக் கண்ணுற மறந்துவிட்டனர். மேல்சபையில் கொண்டு வரப் பட்ட தமிழ் ஆட்சி மொழி மசோதாவையும், சர்க்கார் கவனிக்கவில்லை; இது வருந்தத் தக்கதாகும்"

★

நியூயார்க் பருத்தி விலைமீது சூதாடுவதைத் தடுக்க உதவி நகர போலீஸ் சட்டத்தை திருத்த உத்தேசிக்கப்படுகிறது என்று இன்று சென்னை மேல் சபையில், நிதி மந்திரி சுப்ரமணியம், திரு. ரஜாக்கான் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறினர்.

இந்தச் சூதாட்டத்தைத் தடுக்க, விசேட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன என்றும், குற்றங்கள் குறைய அவை உதவியிருக்கின்றன என்றும், எனவே, இந்த நடவடிக்கைகளால் பலனில்லை எனக் கூறுவது சரியல்லவென்றும், மேலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மந்திரி பக்தவத்சலம் கூறியிருக்கிறார்....

# 'புதிய சட்டம் புராண நாடகத்தைப் பாதிக்காது'

## 'சமூக சீர்திருத்தம் கோரும் லட்சிய நாடகங்களுக்கே பாதகமேற்படும்'

## புதிய நாடக மசோதா பற்றி நடிகர் டி. கே. ஷண்முகம் முறையீடு

"நாடகக் கலையை வெறும் பொழுதுபோக்குச் சாதனமாகவும், பக்திப் பிரசாரமாகவும் மட்டும் கருதிக் கையாள்பவர்கட்குப் புதிய நாடக சட்டத்தால் பாதகம் எதுவும் ஏற்படாதென நினைக்கிறேன்; ஆனால், நாடகத்தின் மூலம் மக்களுக்கு ஏதேனும் ஒரு நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும்—சமுதாயச் சீர்கேடுகளைப் பற்றிப் பிரச்சாரம் செய்யவேண்டும் — மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும், சீர்திருத்தத்தின் பேராலும் ஏமாற்றிப் பிழைக்கும் போலி வேடதாரிகளை அம்பலப்படுத்த வேண்டும்—தொழிலாளரின் துயரங்களையும், விவசாயிகளின் வேதனைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்—என்றெல்லாம் இலட்சியக் கண்ணோட்டத்தோடு நாடகம் நடத்தும் எங்களைப் போன்றோருக்கு, இந்தச் சட்டத்தின் மூலம் பாதகங்கள் ஏற்படக்கூடும் என்று எண்ணுகிறேன்."

—இவ்வாறு, நடிகர் டி. கே. சண்முகம் அவர்கள், 1876-ம் ஆண்டில் செய்யப்பட்ட நாடகச் சட்டமானது திருப்திகரமானதாக இல்லையென்று எண்ணி, தனது தேவைக்கேற்ற முறையில் சென்னை சர்க்கார், கொண்டு வரவிருக்கும் புதிய நாடகச் சட்டம் பற்றி, தாம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

# துறைமுகத் தொழிலாளர் மீது போலீஸ் தாக்குதல்

## கண்ணீர் புகை-தடியடி பிரயோகம்

கிதர்பூர் டிராம் டிப்போ அருகில், வேலையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த தொழிலாளர்களை, எதிர் யூனியனைச் சேர்ந்தவர்கள் தாக்கினார்கள் என்றும், கற்கள் வீசப்பட்டதுடன், சோடா புட்டிகளும் வீசப்பட்டன என்றும் தெரிகிறது. நிலைமை கட்டுக்கடங்காது போகவே போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததுடன், இரண்டு ரவுண்டுகள் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர் என்றும் கூறப்படுகிறது. சுமார் 1000 பேர்களுக்கு மேல் இந்த கலவரத்தில் ஈடுபட்டனர் என்று தெரிகிறது. போலீசார் 15 நபர்களை கைது செய்தனர்.

கல்கத்தா துறைமுகத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினராகிய 3000 பேர் வேலை நிறுத்தம் செய்துவருவது அனைவரும் அறிந்ததே; வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும், வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத தொழிலாளர்களுக்கும் இடையே இந்தக் கலவரம் நடைபெற்றுள்ளது.

சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்திற்குப் பின்னர், வாட் கஞ்ச் தெருவில் தொழிலாளர்களிடையே அடிதடி நடைபெற்றதாம். இதில் இரண்டு கடைக்காரர்கள் காயமுற்றனர் என்றும், ஏராளமான கற்கள் வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது. போலீசார் 15 பேரைக் கைது செய்து நிலைமையைச் சமாளித்தார்களாம்.

இதற்கிடையில் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர் கழகத்தின் செயலாளர் மக்கன் சாட்டர்ஜி, கல்கத்தா போர்ட் டிரஸ்ட் தலைவரைப் பேட்டி கண்டார் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 3—12—1954 வெள்ளி

# போக மாட்டார்களாம்; போர்தொடுப்பார்களாம்!

"எங்களை நாங்களே ஆள்வோம்" என்ற ஒரு நாட்டு மக்களின் உரிமைக் குரலை அடக்கி ஒடுக்க, உலகத்தில் இன்று பல நாட்டவராலும் பெருக்கப்பட்டுவரும் பயங்கர ஆயுதங்களின் கூட்டுப் பலத்தால்கூட முடியாது. இந்த உண்மையைப் புலப்படுத்த, கடந்த கால சரித்திர சம்பவங்கள் கூடத் தேவையில்லை; மனித சமுதாயத்தின் இந்தத் தலைமுறையின் நிகழ்கால வாழ்வில் இடம் பெற்றிருக்கும் மகத்தான 'விடுதலை விழா'க்களே போதுமானவையாகும்.

மேலும், ஒரு நாட்டை இன்னொரு நாடும், ஒரு இன மக்களை இன்னொரு இன மக்களும் அடிமை கொண்டு, அடக்கி ஆள நினைக்கும் போக்கிற்கும் சரித்திரம் முற்றுப் புள்ளி வைப்பதற்கு முனைந்துவிட்டது.

உரிமையே உலகத்தின் செல்வங்களுள் உயர்ந்த மதிப்புடையது என்ற கோட்பாடு வலுப் பெற்றுவரும் இந்த இருபதாம் நூற்றுண்டில்தான், போர்ச்சுகீசியப் பிரதமர் சலாசர், இந்தியத் துணைக் கண்டத்தின் சில சிறிய திட்டுக்களில் தமக்கிருக்கும் ஆதிக்க அதிகாரத்தைக் கைவிட மறுப்பதுமின்றி, தமது அதிகாரத்தை நிலைநாட்ட 'போர்' புரியவும் தயார் என்று தோள் தட்டும் வகையில் பேசி இருக்கிறார், போர்ச்சுகீசிய சட்ட சபையில்.

போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்திலிருக்கும் டையூ, டாமன், கோவா ஆகிய திட்டுக்களின் விடுதலை குறித்து நாம் முன்பே எழுதியிருந்தோம்.

இந்திய உப கண்டத்து மண்ணில் என்றோ ஒருநாள் தங்களுக்குக் கிடைத்துவிட்ட ஆதிக்கம், என்றென்றைக்கும் தங்களிடமே இருக்க வேண்டுமென்று எண்ணும் ஆதிபத்தியங்கள், கால வளர்ச்சியை அனுசரித்து, தங்களின் நிலையையும், தாங்கள் அடிமை கொண்டு ஆதிக்கஞ் செலுத்தும் மக்களின் விடுதலை வேட்கையையும் அறிந்துகொண்டு, அதற்கொப்ப நடந்துகொள்ள முற்படுவதே முறையாகும். அந்த வகையில், 'ஆளும்வரை மதிப்புத்தானே; சுரண்டிய வரை இலாபந்தானே' என்ற மனப்போக்கில், விடுதலை கோரிய மக்களை, தங்களின் அதிகார பலத்தால் அடக்கிவிட நினைத்த பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரர்களும், இறுதியில் வெளியேறித்தான் ஆக வேண்டும் எனும் நிலை ஏற்பட்டது.

பிரிட்டிஷார் இந்திய உப கண்டத்தை விட்டு வெளியேறி ஏழாண்டுகளாகியும், பிரெஞ்சு, போர்ச்சுகல் ஆகிய ஆதிபத்தியங்களுக்கு, இந்திய மண்ணை விட்டு வெளியேற வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை.

'வெளியேறுக' என்ற விடுதலை முழக்கம், பிரெஞ்சுத் திட்டுக்களில் ஒலித்தபோதுகூட பிடி தளர்த்தவில்லை—கொடி கட்டி, முடி தரித்துக் குடியாண்ட மன்னர்களின் கொட்டமடக்கி, மக்களாட்சி சரிதத்தை மலரச் செய்த பிரான்ஸ்!

பின்னர், காலம் காட்டும் குறியும், சரித்திரம் சாற்றும் உண்மையும், மக்கள் எழுப்பும் விடுதலை முழக்கமும், புதுவை, காரைக்கால் பகுதியை விட்டு பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றின.

சில நாள் முன்புதான் பிரெஞ்சிந்தியத் திட்டுகளின் விடுதலைச் சரித்திரம் தீட்டப்பட்டது. இதுகூட போர்ச்சுகல் நாட்டில் ஆட்சிபீடமேறியிருக்கும் சலாசருக்கு புத்தி புகட்டவில்லையென்றால், சலாசர், காலத்தைப் புரிந்துகொள்ளாதவர்— அரசியல் விவேகமற்றவர் என்றுதான் அவர் நாட்டு மக்களேகூடக் கூறுவர்.

டையூ, டாமன், கோவா பகுதிகளில், சலாசர் ஏவும் இராணுவம், விடுதலை வீரர்கள் மீது அடக்குமுறைகளை அள்ளிவீசி வருவதும், ஆங்குள்ள கிறித்துவப் பாதிரிமார்கள் மூலமாய் மக்களிடையே அவர்களின் விருப்பத்திற்கு விரோதமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பதும் தெள்ளெனத் தெரிகின்றன; என்றாலும், அப்பகுதியில் வாழும் மக்கள், 'விடுதலை' கோருகிறார்கள். அந்த 'விடுதலை'க்கு மக்கள் எந்த விலையும் கொடுப்பார்கள் என்பதை, சலாசர் புரிந்துகொள்ள வேண்டும். அடக்குமுறைகளும், மிரட்டலும் உருட்டலும், தப்புப் பிரச்சாரமும், ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள உபயோகிக்கப்பட்ட கருவிகளில் மிகப் பழமையாகிவிட்டவை.

"ஆதிக்கத்தை விடமாட்டோம்; போர்ச்சுகீசிய இராணுவ வீரன் ஒருவன் ஆயிரம் பேரை எதிர்த்துப் போராடுவான்; ஆகவே, பார்த்துவிடலாம் ஒரு கை," என்றெல்லாம், எதை நம்பி சலாசர் பேசுகிறார் என்பது தெரியவில்லை.

அவர் நம்பியிருந்த 'நேட்டோ'வும்(வட அட்லாண்டிக் கூட்டுப் பாதுகாப்பு நிறுவனம்) உயிரிழந்து வருகிறது; நடைப் பிணமாயிருக்கிறது.

பின் எதை எண்ணியும் அவர் பேசவில்லை—அவருக்கு இருக்கும் ஆதிக்க ஆசை, எல்லா ஏகாதிபத்தியங்களுக்கும் இருந்து கரைந்துவிட்ட பேராசை, சில புதிய ஏகாதிபத்தியங்களின் நாவில் நீரூறச் செய்யும் ஆசைதான் அவரையும் பிடித்தாட்டுகிறதுபோலும்!

அளவற்ற ஆயுதங்கள், ஆழமான அகழிகள், இரும்புக் கதவுகள், இன்னும் இவையொத்த எத்தனையோ, அத்தனையும் கொண்டிருந்த எஃகுக் கோட்டைகளாக விளங்கிய ஏகாதிபத்தியங்கள் பல நாட்டு மக்களின் குரலால் சிதைந்ததுண்டு; இன்னும் சில, மக்களின் கோபப் பார்வையாலேயே தீய்ந்ததுமுண்டு; இன்னுஞ் சில, காலம் காட்டும் பாட்டத்தால் கருத்துக் கண் திறக்கப்பட்டு ஆதிபத்திய வேடத்தைக் கலைத்ததுமுண்டு.

இவற்றைப் புரிந்துகொண்டு கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதி மக்களின் விடுதலைப் போர் உச்சம் பெற்று, இப்போது நிலவும் அமைதிக்குச் சீட்டு தரும் அச்சத்தை மூட்டு முன்னர் வெளியேறுவதே போர்ச்சுகீசியர்களின் புத்திசாலித்தனமான செய்கையாகும்.

அதைவிட்டு, கொக்கரிப்பதும், 'தோள் தட்டு'வதும் விவேகமானதல்ல—இன்றைய உலக சூழ்நிலையில்!

உரிமை, விடுதலை, இவையின்றி ஒரு நாட்டு மக்கள் வாழமுடியாது, வாழக்கூடாது என்ற உலக நிலைக்குத் தன்னையும் உயர்த்திக்கொள்ள, கோவா மக்கள் உயர்த்தியுள்ள போர்க் கொடி வெற்றிக் கொடியாக மிளிர்ந்தே தீரும்! அதுவரையிலும் அவர்கள் வெளியே போகமாட்டார்களாம்.

## பெப்சு மராமத்து இலாகா ஊழல்

### விசாரணை நடைபெறுமாம்

பாட்டியாலா, டிச. 2—

பெப்சு மராமத்து இலாகாவில் கட்டிடங்கள் கட்டிய வகையில் ஏராளமான தொகை அனாவசியமாக செலவிடப்பட்டிருக்கிறதென்றும், அதிகாரிகள் தங்கும் விடுதிகள் கட்டிய வகையில் ஏற்பட்ட அதிகச் செலவு ரூ. 91,000 பற்றி சர்க்கார் விசாரணை செய்ய உத்திரவிடும் என்றும் தெரிகிறது.

இது பற்றி நடைபெற்ற ஆரம்ப விசாரணையில், இக்கட்டிடங்களுக்கான 'எஸ்டிமேட்'கள் அதிகாரிகளால் தரப்படவில்லை என்றும், அவைகள் மராமத்து இலாகா செயலாளரினால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும் தெரிய வந்ததாம்.

'பத்திந்தா' என்னுமிடத்தில் இதுபோன்ற விடுதிகள் கட்ட ரூ. 25,200 தான் செலவாகியதாம். ஆனால், பாட்டியாலாவில், ரூ. 2,300 ஒவ்வொரு கட்டிடத்திற்கும் அதிகம் செலவாயிற்று என்று தெரிகிறது.

சர்க்கார் அதிகாரிகள் எடுத்த அளவுகளை கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகள் சரி பார்க்கவில்லை என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்ததாம். ஆனால் கட்டிடம் கட்ட உபயோகிக்கப்பட்ட சாமான்கள் சாதாரணமானவை என்றும், வேலைத்தரம் மிகவும் குறைவு என்றும் தெரிகிறதாம்.

## சீன வருகை குறித்து பர்மியப் பிரதமர் விளக்கம்

பர்மியப் பிரதமரான யூ-நு செஞ்சீனா சென்றுள்ளார் அல்லவா? அவர் சீனா வந்த இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் ஜனாதிபதி மா-சே-துங்கைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

"புதியதொரு சமுதாயத்தை உருவாக்குவதில் சீன மக்களும், மலைவர்களும் மேற்கொண்டுள்ள தாபெரும் முயற்சிகளை நேரில் காண்பதற்கும், பழைய நண்பர் சூ-என்-லாயையும், இதர சீனத் தலைவர்களையும் சந்திக்கவும், சீனா, பர்மா ஆகிய நாடுகளின் நட்புறவிற்கு வேரூன்றுவதும், தமது சீன வருகையின் நோக்கமென்று யூ-நு, பீகிங் வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# டுனீஷியாவில் அமைதி ஏற்படுத்த
## பிரெஞ்சுக்காரர்களின் புதிய சமாதான திட்டம்

டுனிஸ், நவ. 30—

டுனீஷியாவில் பிரெஞ்சு சர்க்காரை எதிர்த்துப் போராடும் மக்களை ஒழுங்குபடுத்தி அவர்களுடன் சமாதானம்' செய்து கொள்ளும் முறையில் பிரெஞ்சு சர்க்கார் திட்டமொன்றை வகுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இப்போது பிரெஞ்சு ஆட்சியை எதிர்ப்பவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கின்றனர்.

சென்ற மூன்றாண்டு காலமாக அவர்களை அடக்க பிரெஞ்சுத் துருப்புகள் பயன்படுத்தப்பட்டிருப்பதும், கலகக்காரர்கள் திடீரென்று பிரெஞ்சுக்காரர்களைத் தாக்குவதும் அங்கே சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்து வருகின்றன.

இந்த நிலை நீடிக்காது இருக்க 40 பேர்கள் ஜீப் கார்களில் ஏறிக்கொண்டு கலகக்காரர்களிடம் தூது சென்று வருகின்றனர். இவர்களிடம் சமாதானம் பற்றிய ஒப்பந்தப் பத்திரம் ஒன்று இருக்கிறதாம். இப்படிச் செல்லுவோரில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பிரெஞ்சு சர்க்காரின் அதிகாரிகள் ஆவர்.

கலகக்காரர்கள் தங்களிடமிருக்கும் ஆயுதங்களை பிரெஞ்சுக்காரர்களிடம் கொடுத்து, பின்னர், இதுவரை நடைபெற்றவைகளை மறந்து ஒழுங்காக வாழ்வோம் என்று சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால், இந்த கலகக்காரர்களை அரசாங்கம் மன்னிக்கும் என்று சொல்லப்படுகிறது.

இத்திட்டத்திற்கு ஒப்புக்கொள்ளும் கலகக்காரர் ஒவ்வொருவரும், தனது கைவிரல் ரேகைகளை பிராங்கோ—டுனீஷிய அதிகாரிகளின் சார்பில் ஒப்பந்தப் பத்திரத்தில் பதிய வைக்குமாறு கோரப்படுவார்கள்.

"இத்திட்டத்திற்கு ஒப்புக்கொள்ள மறுத்தால், கலகக்காரர்களை, பிரெஞ்சு அரசாங்கம் தேடிப் பிடித்து நாசம் செய்துவிடும்; இரக்கம் ஏதும் காட்டாது." என்று டுனீஷியாவில் உள்ள பிரெஞ்சு ரெசிடெண்ட் - ஜெனரல் கலகக்காரர்களை எச்சரித்திருக்கிறார்.

இதற்கிடையில், இச்சமாதானத் திட்டம் அமுல் செய்யப்படுவதையொட்டி, பிரெஞ்சுத் துருப்புகள் கலகக்காரர்களைத் தாக்குவதை நிறுத்தி வைத்துள்ளார்கள்.

கலகக்காரர்கள் வாழும் பிரதேசங்களில் சுற்றுப் பயணம் செய்யும் சமாதான வாதிகளுடன், டுனீஷியாவின் முக்கிய மனிதர்களில் ஒருவரான சித்தி முகமது அமீன் என்பவர் செல்கிறார்.

டிசம்பர் திங்கள் 10-ம் நாளுக்குள் கலகக்கரர்கள் இச்சமாதானத் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தை ஒப்புக்கொள்ளும் கலகக்காரர்களின் குடும்பங்களை சர்க்கார் விடுதலை செய்யுமாம். கலகக்காரர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்பதற்காக அவர்கள் குடும்பங்களை பிரெஞ்சு சர்க்கார் காவலில் வைத்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

## இலங்கை தேயிலையில் 'கலப்படம்'

### புல்லும், தென்னை ஓலையும் கலக்கப்பட்டதாம்!

இலங்கையில் கலப்படம் செய்யப்பட்ட சுமார் 3,000 பவுண்டு நிறையுள்ள தேயிலை, சர்க்காரால் கைப்பற்றப்பட்டு 'சீல்' வைக்கப்பட்டதாக செய்தி வெளிவந்துள்ளது.

அந்தத் தேயிலைத் தூளில், காய்ந்த புல், காய்ந்த தென்னை ஓலை இவை எல்லாம் தேயிலை இலைபோல் உரு மாற்றப்பட்டு, தேயிலையுடன் கலப்படம் செய்யப்பட்டிருந்ததாம்.

இந்த கலப்படத் தேயிலை, ஒரு பிரபல வியாபாரியிடமிருந்து இலங்கையைச் சுற்றிப் பார்க்க வந்த சிலரால் அவர்களின் வெளி நாட்டு நண்பர்களுக்குப் பரிசுப் பொருளாகத் தருவதற்காக வாங்கப்பட்டவையாம்.

தேயிலை இலாக்கா அதிகாரிகள் நடத்திய திடீர் பரிசோதனையின் விளைவாக, தேயிலையுடன் வேறு பொருள்களைக் கலப்படம் செய்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு, இருபத்தைந்துக்கும் அதிகமான வியாபாரிகளின் வியாபார 'லைசென்சு', ரத்து செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலையை வாங்குகிற எகிப்து, இனி இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலை "சுத்தமானவை; கலப்படமில்லாதவை" என்ற உறுதி மொழியுடன் அனுப்பப்பட வேண்டும் என்று, இலங்கை அரசாங்கத்திற்கு எழுதியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

### அகண்ட உலகைக் காண....
## 'ஆகாய மேடை'

"'ஆகாய மேடை!' அங்கிருந்துகொண்டே அகில உலகத்தையும், ஐந்து கண்டங்களையும் காணலாம்."

இப்படி ஒரு சாதனத்தை இன்னும் 10 ஆண்டுகளில் கண்டுவிடக் கூடுமென அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகின்றனராம்.

அமெரிக்காவில் உள்ள இராணுவ, பறக்கும் குண்டு ஆராய்ச்சி சாலை டைரக்டரான பேராசிரியர் வார்னர் வான் பிரான் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இந்தப் பேராசிரியர், கடந்த உலக யுத்தத்தின்போது 'வி-2' குண்டு தயாரிப்பதில் ஜெர்மனிக்குப் பெரிதும் உதவியவர்.

இவ்வித 'ஆகாய மேடை' ஒன்று அமைப்பதற்கான விவரங்கள் அமெரிக்காவிடம் இருப்பதாகவும், இதைத் தயாரித்து ஆகாயத்தில் மிதக்க விட்டால், இது, பூமியின் உபக்கிரகமாக விளங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வானத்தில், 1000 மைல் உயரத்தில் மிதக்க விடப்படும் இதில் பொருத்தப்படும் தொலை நோக்கி ஆடிகள், பூமியின் தோற்றத்தை 'டெலிவிஷன்' மூலம் மேடைக்கு அனுப்புமாம்.

## தாழ்த்தப்பட்ட குழந்தைகள் வளர்ப்பு

### இரண்டு பேர் முன்வந்தனர்!

தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தை ஒன்றை எடுத்து வளர்க்கும் ஒவ்வொரு இந்துவுக்கும் பம்பாய் சர்க்கார் ரூ. 20 மாதம் தோறும் தருமென்று வெளியிடப்பட்டுள்ள கோரிக்கைக்கு அதிக ஆதரவு கிடைக்கவில்லையெனத் தெரிகிறது.

இதுவரையில் இரண்டு பேர்தான், இக்கோரிக்கைக்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது.

ஆனால், இவர்கள் இருவரும், குழந்தைகளை வளர்ப்பதற்காக பம்பாய் சர்க்கார் தருவதாக ஒப்புக்கொண்ட உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்களாம்.

சபர்மதி ஆசிரமத்தில் பேசிய பம்பாய் உதவி அமைச்சர் வந்தர்கர், இதுபற்றி வருந்தியுள்ளார்.

"சமூகத்தின் இழிவுகளைப் போக்க வேண்டுமானால், சமூக சேவகர்கள் மக்களின் எண்ணத்தில் தக்கதோர் மாற்றத்தைச் செய்வது அவசியமாகும்," என்று அவர் கூறியுள்ளாராம்.

---

பிரஜா - சோஷலிஸ்டு கட்சியின் தலைவர்களில் ஒருவரான அசோக் மேத்தா ஸ்ரீநகரில் தாக்கப்பட்டது பற்றி, போலீசார் விசாரணை முடிந்து விட்டதென்றும், ஐந்து பேர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

# ஏ. வி. பி. ஆசைத்தம்பி—

## "சுதந்திரன்" நிருபர் பேட்டி விவரம்

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவராவர். அண்மையில் அவர் இலங்கைக்குச் சென்று சுற்றுப்பிரயாணம் செய்தார். அச்சுற்றுப்பிரயாணத்தின்போது, அவர், 'சுதந்தின்' எனும் இதழுக்குப் பேட்டியொன்று தந்துள்ளார். அதன் விபரம் கேள்வி—பதில் ரூபத்தில், கீழே தரப்பட்டுள்ளது.

கேள்வி: தற்சமயம் சென்னையில் நடைபெறும் காமராசர் ஆட்சியைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

பதில்: திராவிடர்களுக்கு இயன்ற அளவு நன்மை செய்வதாக நம்பப்படுகிற ஓர் ஆட்சி.

கே: 'கல்லக்குடி' வெற்றியைத் தொடர்ந்து வேறு ஏதாகிலும் செய்யத் திட்டமிட்டு இருக்கிறீர்களா?

ப: கவர்னர் சம்பளப் பிரச்சினை ஆலோசனையிலிருக்கிறது.

கே: சமீபத்தில் செய்துகொள்ளப்பட்ட இலங்கை இந்தியர் ஒப்பந்தம் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: பல விவாதங்களுக்கு இடங்கொடுக்கிற 'வழவழா, கொழகொழா' திட்டம்.

கே: இலங்கையில், இந்தியத் தூதுவராகயிருந்த திரு. தேசாய் இங்கிருந்து சென்றுவிட்டதால், இனி இங்கு தூதுவராக வரவேண்டியவர் ஒரு தென்னாட்டவராயிருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள்; ஆனால், யாரோ ஓர் வட நாட்டவரின் பெயர் பிரஸ்தாபிக்கப்படுகிறதே, இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தமிழர்கள் நியமிக்கப்பட்டாலும்கூட, தமிழர்களுக்குச் சாதகமாக நடக்கக்கூடிய நாணயஸ்தர் நியமிக்கப்படமாட்டார்; காரணம், நியமன அதிகாரம் வடநாட்டில்—டில்லியில் இருக்கிறது.

கே: 'நேருவிற்குப் பின், நேருவிற்குப் பின்,' என்ற பிரச்சினை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதே, நேருவிற்குப் பின் என்னவாகும்?

ப: நேருவின் பிறப்பிலிருந்து உலகம் உதயமானதாகவோ, நேருவின் மறைவு உலகத்தின் அஸ்தமனமாகும் என்பதாகவோ யாரும் கருதத் தேவையில்லை.

கே: தற்சமயம் ஆந்திராவில் மந்திரி சபை இராஜினாமா செய்துவிட்டதால், பொதுத் தேர்தல் நடைபெறப்போவதாக அறிவித்திருக்கிறார்களே; ஆளும் கட்சி தோற்றுவிட்டால், எதிர்க் கட்சியை அழைத்து மந்திரி சபை அமைக்கக்கோருவதே நியாயமான ஜனநாயக தர்மம்; அப்படி முயலாமல், தேர்தல் நடத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்? தேர்தல் விளைவுகள் என்னவாக இருக்கும்?

ப: சட்டசபை அல்லது மேல்சபை உறுப்பினராகவோ தேர்ந்தெடுக்கப்படாத ஆச்சாரியாரை முதல் மந்திரியாக நியமித்த ஜனநாயகத்தைவிட, இந்த காங்கிரஸ் ஜனநாயகம் மோசமானதல்ல! மற்றவைகளைப்பற்றி இப்போது சொல்வதற்கில்லை.

கே: இலங்கையிலுள்ள தமிழரசு கட்சியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறீர்களா?

ப: 22 லட்சம் கொண்ட தமிழர்கட்கு, மொத்தம் 80 லட்சம் மக்களைக் கொண்ட இலங்கையில் நியாயமான உரிமை கிடைக்காவிட்டால், தமிழரசுக் கட்சி, ஒரு சமஷ்டி அரசாங்கம் ஏற்படுத்த முயற்சிப்பதிலே தவறில்லை.

கே: தாங்கள் சார்ந்திருக்கும் இயக்கத்தை, 'நாஸ்திகர்கள் கூட்டம்,' என்று சில மதவாதிகள் கூறுகிறார்களே? உண்மையில் நீங்கள் நாஸ்திகர்களா?

ப: நாஸ்திகர்கள் அல்ல! 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற அடிப்படையில் சமுதாயத்தை உருவாக்க உழைக்கும் சமதர்மவாதிகள்தான் நாங்கள்.

கே: "தாங்கள்தவறானதென்று சொல்லும் திராவிடநாடு கோரிக்கையை வற்புறுத்தும் திராவிட இயக்கம், தென்னாட்டில், தமிழரசுக் கழகம் உட்பட சகல இயக்கங்களையும்விட தீவிரமாக வளர்ந்து வருகிறதே, அதற்குக் காரணம் என்னவாகயிருக்க முடியும்" என்று இலங்கை வந்திருந்த சமயம் திரு. மா. பொ. சிவஞான கிராமணியாரைக் கேட்டதற்கு, "நீங்கள் கருதுவதுபோல், அந்த இயக்கம் வளர்ச்சியடைவதாகவோ, மக்களிடம் செல்வாக்கு பெறுவதாகவோ சொல்வதற்கில்லை," என்று கூறினார். இது உண்மையா?

ப: திரு. சிவஞான கிராமணியார் அவர்கள், அரசியல் சூதாட்டத்திலே ஒரு 'ஜோக்க'ராகவே இருந்து வருகிறார்; இன்று, செல்வாக்கில்லாத ஆச்சாரியார் கையிலே இருக்கிறார். திராவிட நாட்டுப் பிரிவினைக்கும் தனக்கும் சம்பந்தமில்லாத இலங்கையிலேயே தி. மு. க. வளர்ச்சி அதிகமிருப்பதைக் கண்டு, தாபகத்திலே அதனுடைய வளர்ச்சியைக் கனாக் கிட்டுக் கொள்ளலாம்.

கே: காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று கூறிய பிறகும், காங்கிரஸ் கட்சியின் தாசானுதாசனாக கிடந்தார்களே, ம. பொ. சி. கட்சியினர்—அவர்கள் கொள்கை சரியா—?

ப: சிலம்புச் செல்வர் சிவஞானத்திற்கு, அவ்வை பாட்டி கூறிய "மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்" என்ற பழமொழி மறந்திருக்க வேண்டும்; அல்லது மான, ரோஷ உணர்ச்சி மறந்து போயிருக்க வேண்டும்.

கே: தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை, இலங்கை வரக்கூடும் என்று 'சுதந்திரனி'ல் வெளியான செய்தியை ஆதாரங் காட்டி தங்கள் 'தனியரசு' இதழில் பிரசுரித்திருந்தீர்களே; அண்ணா, இலங்கைக்கும், மற்றும் நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்யவிருப்பது உண்மையா...?

ப: 'சுதந்திரன்' ஆசிரியர் எழுதியதைத் தவிர, வேறு ஒன்றும் அறியேன்.

கே: திராவிட நாடு பிரிவினையைத் தவிர, தங்களுக்கும், தென்னாட்டு கம்யூனிஸ்டுகளுக்கும் கொள்கையளவில் என்ன வித்தியாசம்?

ப: அதிக வித்தியாசமில்லை—அகிம்சையைக் கடைபிடிப்பதைத் தவிர.

கே: புதிய சமுதாயத்தை கட்டி வரும் சீன மக்கள் ஆட்சியின் தலைவர்கள், தங்கள் நாட்டின் புரட்சி பொருளாதார அடிப்படையில் நடந்த புரட்சி என்றும், அதனால்தான் பழைய சீனத்தின்சீர்கெட்ட மூடப் பழக்கங்களையும் ஒழித்து வர முடிகிறதென்றும் கூறுகிறார்களே; சமுதாயப் புரட்சி கோரும் நீங்கள் இதுபற்றி என்ன விளக்கம் தர விரும்புகிறீர்கள்?

ப: சன்-யாட்சனின் சமுதாய சீர்திருத்தத்திற்கு அப்புறமே மார்க்சியப் பொருளாதார சமத்துவ முயற்சி சைனாவிலே செய்யப்பட்டது. அதைப்போலத்தான் திராவிடத்தைப் பொறுத்த வரையில்.

கே: திராவிட நாடு கோரும் நீங்கள், தென்னாட்டில் மட்டும் தான் சுரண்டல் இருக்கிறது என்று கூறுகிறீர்களா? வடநாட்டாருக்கும் காங்கிரஸ் ஆட்சி எதிரியாகத்தானே உள்ளது? எனவே, இரு மக்களுக்கும் பொது எதிரியான காங்கிரசை ஒழிக்க தேசரீதியான எதிர்ப்பு இயக்கம் உதவுமல்லவா?"

ப: சுரண்டல் எல்லா இடத்திலும்தான் இருக்கிறது. தென்னாட்டிலே உள்ள அன்னிய சுரண்டலை தென்னாட்டவர்கள் எதிர்க்கிறார்கள்! அதுதான் தி. மு. க.-வின் வடநாட்டு எதிர்ப்பு. வடநாட்டாரும் தென்னாட்டாரும் சேர்ந்து மட்டும் சுரண்டல்காரனை ஒழிக்க ஒன்று சேருவதைவிட, அமெரிக்கர், ஆங்கிலேயர் என்ற பேதமின்றி, உலக மக்கள் அனைவருமே ஒன்று சேர்ந்து சுரண்டல்காரர்களை எதிர்க்கலாம் என்ற சித்தாந்தம், படிப்பதற்கும் கேட்பதற்கும் இனிமையாகத்தான் இருக்கும்; ஆனால், அனுபவ சாத்தியமற்ற சித்தாந்தம். அவரவர்கள் தனித்தனியே எதிர்த்து அப்புறம் உலக மக்களாக ஒன்று சேர்வதிலே ஆட்சேபனையில்லை.

கே: சர்வதேசரீதியாக, உங்கள் இயக்கத்தின் கொள்கைகள் என்ன?

ப: சமாதானமும், சந்தோஷமும் நிலவ வேண்டும்.

கே: திராவிட நாடு கிடைத்த பிறகு அதன் பொருளாதார, அரசியல், சமூக திட்டத்தை விளக்கி விபரம் தருவீர்களா?

ப: சுரண்டுகிற உள்நாட்டவனோ, வெளிநாட்டவனோ, ஏமாற்றுகிறவனோ, அதிகார வெறி பிடித்தவனோ இருக்க மாட்டான். சோஷலிச சமதர்மக் குடியரசு நிறுவப்படும்.

# தக்கோலம் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை

28—11—54 மாலை 6 மணிக்கு, தக்கோலம் தேரடிக் கருகில், தோழர் செல்லப்பா தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தின்போது, தோழர்கள் எஸ். ஜி. இராமசாமி, ஏ. எல். சி. கிருட்டிணசாமி, சி வி இராசகோபால், இராம. அரங்கண்ணல், பொதுச்செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். ஏராளமான மக்கள் கூடியிருந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு, வரவேற்பிதழ்களும், மலர் மாலைகளும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பெற்றன. பந்தல் அலங்காரமும், மின்சார விளக்கின் அமைப்புகளும் பாராட்டத் தக்கவையாகும்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசுகையில், இந்து மத புராணங்களில் காணப்படும் பகுத்தறிவுக் கொவ்வாத கட்டுக் கதைகளையும், அவற்றின்மேல் மக்கள் கொண்டிருக்கும் மூடநம்பிக்கைகளையும் விளக்கினார். மேனாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், நம் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்குமுள்ள வேறுபாட்டினை எடுத்துக் காட்டி, நம் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட அளவோடு நின்று விட்டதற்குக் காரணம் இந்து மதக் கோட்பாடுகளேயாகுமென்பதை விளக்கி, மக்கள், தம் மத, மூடநம்பிக்கைகளை அகற்றி, அறிவு வளர்ச்சி பெறவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில், நமது நாட்டிற்குத் தேவையான எல்லாவகைப் பொருட்களும், கனிப் பொருட்களும் கிடைத்தும், திராவிட இன மக்கள் சுகவாழ்வு வாழ முடியாமற் போனமைக்குக் காரணம், தென்னாட்டின் மேல் டில்லி சர்க்கார் கொண்டிருக்கும் ஆதிக்கப் பிடியேயாகுமென்பதையும், ஆகையால், நாம் வடநாட்டுப் பிடியிலிருந்து விலகினால்தான் நாம் சுகவாழ்வு பெறமுடியும் என்றும் விளக்கிப் பேசினார்.

## மதுரை வட்டத்தில் மு. கருணாநிதி

மதுரை, டிச. 2—

28—11—54 காலை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் மூலம் தோழர் மு. கருணாநிதி, முல்லை-சக்தி, எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் இங்கு வந்து சேர்ந்தனர். மதுரை நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து, மற்றும் கழகத் தோழர் அனைவரும் அவர்களை வரவேற்றார்கள்.

காலை 9 மணிக்கு தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற மாரியம்மாள்—சுப்பிரமணியம் திருமணத்தில் கலந்துகொண்டு, உடன் புறப்பட்டு, ஓய்வு பெற்ற நீதிபதி தோழர் நடராசநாடார் தலைமையில் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற பாஸ்கரன்—தங்கம் திருமணத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

மாலை 4 மணிக்கு வெங்கடாசலபுரத்தில் வ. உ. சி. படிப்பகத்தின் சார்பாக நடைபெற்ற வ. உ. சி. நினைவு நாள் விழாவில் கலந்துகொண்டு, தோழர்கள் மு. கருணாநிதி, இராஜேந்திரன், முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாலை 5 மணிக்கு திடீர் நகரத்தில் தோழர் கருணாநிதிக்கு ஓர் சிறப்பான வரவேற்பு நடைபெற்றது. ஆண்களும் பெண்களுமாக 5000-த்திற்கு மேற்பட்டவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

**மூப்படைந்த தாய்மார்கள் காட்டிய ஆர்வம், கட்சியின் வளர்ச்சிக்கு நல்லதோர் அடையாளமென்று தோழர் மு. கருணாநிதி குறிப்பிட்டார். சமுதாயத்தின் அடித்தளத்தில் அமிழ்த்தப்பட்டிருப்போருக்கு வாழ்வளிக்க தி. மு. க. தன் முழு சக்தியை பிரயோகிக்குமென்று அவர் கூறினார்.**

தோழர்கள் எஸ். முத்து, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசினர். பின்னர் திராவிட இளைஞர் மன்றச் சார்பில் ஓர் தேனீர் விருந்து நடத்தப்பட்டது.

மாலை 7 மணிக்கு தோழர் கே. எஸ் சந்தானம் தலைமையில் திலகர் சதுக்கத்தில் மாபெரும்பொதுக் கூட்டம் நடைபெற்றது. முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தோழர்கள் எஸ். முத்து, எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுற்றது.

★

### உசிலம்பட்டி

29—11—54 மாலை நடைபெற்ற கூட்டத்திற்கு தோழர் எஸ். முத்து தலைமை தாங்கினார். தோழர்கள் மு. கருணாநிதி, எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, கே. ஏ. கலையழகன் ஆகியோர் பேசினர்.

★

### ஏழுமலை

அதன் பின், இரவு 9 மணிக்கு ஏழுமலையில், அவ்வூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் சிவம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு. கருணாநிதி, எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எஸ். முத்து ஆகியோர் பேசினர்.

### திருவள்ளுவர் கழகம் குலசேகரப்பட்டணம்

26—11—54-ல் தோழர் ஏ. வீரபாகு தலைமையில் நடைபெற்ற மேற்படி கழக உறுப்பினர்கூட்டத்தில் தோழர் சண்முகம் குலசேகரன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும் 13 பேர்கள் கொண்ட செயற் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### அறிவுப் பூங்கா படிப்பகம்

16—11—54ல் நடைபெற்ற மதுரை-சத்திரப்பட்டி யிலுள்ள மேற்படி படிப்பகத்தின் செயற்குழு கூட்டத்தில், புதிய பொருளாளராகத் தோழர் பொ. கோபாலகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### குளித்தலை கலைமகள் கழக 2-வது ஆண்டு விழா

29—11—54 மாலை 5½ மணியளவுக்கு திரு. இரம்போலா மாஸ்கரனஸ் அவர்கள் தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது. தலைவர் கவிமணியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறி, அவர்தம் உருவப்படத்தைத் திறந்துவைத்தார். பின்னர், திரு. ரத்தினசபாபதி வ. உ. சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறி, அவர்தம் உருவப் படத்தைத் திறந்துவைத்தவிட்டு, "வாழ்க்கை வாழ்வதற்கே" என்னும் தலைப்பில் சொற்பெருக்காற்றினார். இறுதியில் பாலம் - லலிதா குழுவினரின் இன்னிசை நடைபெற்றது.

### வட சென்னை குறள்நெறிக் கழகம்

25—11—54 மாலை 6 மணிக்கு சென்னை இராயபுரம், ஆதம் சாயபு தெரு, புளியங்கொட்டை முதலித் தோட்டத்திலுள்ள தோழர் வீரன் பட்டரையில், திரு. கி. தியாகராசன் தலைமையில் நடைபெற்ற குறள்நெறிக் கழக அமைப்புக் கூட்டத்தின்போது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: தி. க. மதிவாணன்; துணைச் செயலாளர்: மு. த. இளஞ்சேரன்; பொருளாளர்: மு. பொ. வீரன். நிர்வாக உறுப்பினர்கள்:— முகம்மது அலி, கா. ஆனந்தன், கி. தியாகராசன், ச. து. ராசசேகரன், ப. கோ. வீரராகன், கரிகாலன், கோவிந்தன், கல்லதம்பி. பின்னர், வாரத்திற்கொரு முறை குறள் வகுப்பு நடத்துவதென்றும், அடுத்து வரும் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### "அந்த இரவு"—நாடகம்

22—11—54 இரவு 10 மணிக்கு கோவில்பட்டியில், நகராட்சி மன்றத் தலைவர் ஈ. வே. அ. வள்ளிமுத்து தலைமையில், கடம்பூர் மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால், 'அந்த இரவு' எனும் சமூகச் சீர்திருத்த நாடகம் நடைபெற்றது. தலைவர் தமது உரையில், வடநாட்டுப் பிடியிலிருந்து திராவிட நாடு விடுதலை பெறவும், திராவிடப் பெருங்குடி மக்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைய வேண்டுமெனவும், பணி புரியும் நாடக மன்றக் குழுவினர், இவைபோன்ற அரிய கருத்துக்களடங்கிய நாடகங்களை நடத்தி, பகுத்தறிவு இயக்கத்தை வளமடையச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டு, மன்றத்தாரைப் பாராட்டிப் பேசினார்.

### நன்றி அறிவிப்பு

"21—11—54ல், சென்னை கோகலே மண்டபத்தில், சென்னை 29, 30-வது வட்ட தி. மு. கழகங்கள் சார்பில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக்குப் பேருதவி புரிந்த அனைவருக்கும், மேற்படி இரண்டு கிளைக் கழகங்களின் சார்பாக எங்களது பணிவன்பான நன்றி உரித்தாகுக," என்று 30-வது வட்டச் செயலாளர் தோழர் மணிவண்ணனும், 29-வது வட்ட பொருப்பாளர் தோழர் வேணுகோபாலனும் [illegible] கொள்கின்றனர்.

# கடன் ஒத்திவைப்பு சட்டம்

## மேல்சபையில் குறிப்புகள்

சென்னை, டிச. 3—

"விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை நீடிப்பதா, கூடாதா என்பதே இன்று மிக முக்கியமான பிரச்சினையாயிருக்கிறது. கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை உருவாக்கியதின் மூலம், கடன்பட்ட விவசாயிகள் பலனடைவர் என சர்க்கார் நம்பிற்று; ஆனல், விலைவாசிகள் வீழ்ச்சியின் காரணமாக விவசாயிகளுக்குப் போதுமான இலாபம் கிடைக்கவில்லை; அதனுல், விவசாயத் தேவைகளுக்குப் பணமின்றிக் கஷ்டப்படுகின்றனர்.

"இப்போதுள்ள நிலையில், இந்தக் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை நீடிப்பது மட்டும் போதுமானதல்ல; சட்டம் நீடிக்கப் பட்டால், ஒத்திவைக்கப்படுகிற காலத்திற்கு கடன் தொகைக்கான வட்டிச் சுமையை விவசாயிகள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்; எனவே, 1938-ம் வருடத்திய விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் அடிப்படையில் இன்று விவசாயிகளுக்கு நிவாரணம் தரப்பட வேண்டும்; அதாவது, வட்டி விகிதம் 4½ சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும்; மேலும், இதுவரை தரப்பட்டுள்ள வட்டியின் அளவு, கடன் தொகையில் 50 சதவிகிதத்திற்கு அதிகமாகியிருந்தால், இனிமேல் வட்டி கிடையாது என்றிருக்க வேண்டும்; மேலும், எஞ்சியுள்ள கடன் தொகையை, தவணைகளில் திருப்பித் தருவதற்கு வழி வேண்டும்."

—என்று, சென்னை மேல்சபையில் நேற்றைய தினம் பேசிய டி. புருஷோத்தம முதலியார் எம்.எல்.சி. குறிப்பிட்டார்.

அவரை அடுத்து இந்தச் சட்டம் பற்றிப் பேசிய பரமேஸ்வரன் குறிப்பிட்டதாவது:—

"இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு நிவாரணம் தருவதற்குப் பதில், கிராமப்புறங்களில் கடன் வசதியை அறவே அற்றுப்போகச் செய்துவிட்டது; இது விவசாயிகளுக்குப் பலன் தரத் தக்கதல்ல என்ற எண்ணம் விவசாயப் பெருமக்களிடையே காணப்படுகிறது; எனவே, கிராமப் பொருளாதார நலன் கருதி சர்க்கார், இந்தத் திட்டத்தை நீடிப்பதின் மூலம் விவசாயிகளுக்கு நிவாரணம் தரலாம் எனக் கருதக் கூடாது. விவசாயிகளுக்கு நிரந்தரமான நிவாரணம் தர சர்க்கார் முயற்சிக்கவேண்டும்."

திரு. பாலசுப்பிரமணிய அய்யர் பேசுகையில் கூறியதாவது:—

"இந்தச் சட்டம், சாதாரண ஏழை விவசாயிக்கு தீங்கிழைப்பது என்றே ஒவ்வொருவரும் கருதுகின்றனர்; இப்போதுள்ள சட்டத்தினுல், பெருவாரியான நிலம் படைத்தவர்களும் பலன் பெறுகிருர்கள். கடன் நடமாட்டமே இல்லாதுபோய், ஏழை விவசாயிகளுக்கு வெகுவாகத் தீங்கிழைத்துவிட்டது. இந்தச் சட்டத்தினுல் உருவாகியுள்ள நிச்சயமற்ற தன்மை ஒழியவேண்டும். பாங்கிகள், கடன் பணத்தை வசூலிப்பதில் பெருங் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

"இந்தச் சட்டத்தினுல் பலன் பெற்றவர்கள் பணக்காரர்கள் மட்டுமே," என்று குறிப்பிட்டிருக்கிருர்.

## நடிகர் குழுவினர்

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனராம்.

★

### வைத்தியனுத அய்யரின் ஆத்திரம்!

மதுரை பிரபல காங்கிரஸ்காரரான ஏ. வைத்தியனுத அய்யர், தடியடி பிரயோகம் நடைபெற்ற இடத்திற்கு வந்து பார்வையிட்டாராம். போலீசாரின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்திருக்கிருர் அவர்.

ஏற்கனவே, சீதையையும் ராமனையும் இழிவுபடுத்துகிற நாடகத்தை நடத்துவதற்கு அனுமதி தந்திருப்பதின் மூலம் மத நம்பிக்கையுடைய மக்களின் மனம் புண்பட்டிருக்கையில், போலீசார் வேறு கடுமையாக நடந்துகொண்டது கூடாதெனக் கூறிஞராம். இந்த நாடகம் தடை செய்யப்பட்டிருந்தால் இந்த வருந்தத்தக்க சம்பவங்களைத் தடுத்திருக்க முடியும் என்றுகூட புலம்பியிருக்கிருர் அந்த அய்யர்.

★

சென்னை மேல் சபையில் கவர்னரின் உரைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட பாலசுப்ரமணிய அய்யர், சர்க்கார் கொண்டுவரவிருக்கிற நாடகத் தடை மசோதாவை வரவேற்றிருக்கிருர்.

# நடிகர் டி. கே. சண்முகம் அறிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வறிக்கையில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"இந்திய நாடு முழுவதிலும் பழைய சட்டமே போதுமானதாக இருக்கும்போது; தமிழ் நாட்டுக்கு மட்டும் ஒரு தனிச் சட்டம் இது சம்மந்தமாகத் தேவைப்படுகிறதென்ருல், அது தமிழ் நாடகக் கலை வளர்ச்சி பெற்று வருவதையும், மக்களோடு அதிகத் தொடர்பு கொண்டு வருவதையும்தான் உறுதிப்படுத்துகிறதென நினைக்கிறேன்;

"சட்டத்தின் விதிமுறைகள் எப்படியிருந்தாலும், அதை அமுல் நடத்தும் விதத்தில் தான் அதிகக் கஷ்டங்கள் ஏற்படும்; இது, எங்கள் அனுபவம். ஆங்காங்கே உள்ள சர்க்காரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் மனேபாவ உணர்ச்சிகட்கு ஏற்றபடி நாடகச் சட்டம் அமுல் நடத்தப்படுவதற்கு இடமிருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் அப்பில் செய்துகொள்வது, சர்க்காருடன் வழக்காடுவது என்பதெல்லாம் சாதாரண நிலையில் நாடகத் துறையில் ஈடுபட்டுள்ள பெரும்பாலோருக்கு ஏற்றதல்ல;

"இது சம்பந்தமாக, நாடகக் கழகம் தென்னிந்திய நடிகர் சங்கம் ஆகிய கலை நிறுவனங்களின் சார்பில் பிரதிநிதிகள் அமைச்சர்களைப் பேட்டி கண்டு நிலைமைகளை விளக்கி, குறைகளை நிவர்த்தி செய்வர் என எதிர்பார்க்கிறேன்.

"நாடக மேடையில் துவேஷப் பிரச்சாரங்கள் அகற்றப்பட வேண்டுமென்பதில் எங்களுக்குச் சிறிதும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனுல், அந்த எண்ணத்தோடு கொண்டுவரப்படும் சட்டம், இலட்சியக் கண்ணேட்டத்தோடு கலைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை பாதிக்காத முறையில் இருக்க வேண்டும்;

"சென்னை சட்டசபையில் இம் மசோதா விவாதத்திற்கு வரும் பொழுது, அவசரப்படாமல், இதனை நன்கு ஆராய்வதுடன்; 'செலக்ட் கமிட்டி'க்கு அனுப்பி, நாடகத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் கருத்துக்கும் சர்க்கார் மதிப்பளிக்கக் கோருகிறேன்."

# கழகக் கூட்டங்கள்

★

**சேலம்**

அரிசிபாளையம் தி. மு. கழக முன்னிலையில்

**5—12—54** மாலை **6** மணிக்கு

*தலைவர்:* பி. ஏ. வீரபத்ரையா

*பேசுவோர்:*

இரா. நெடுஞ்செழியன்

டி. கே. தாமரைச்செல்வன்

★

**குடியேற்றம்**

ஆற்றில்

**5-12-54** மாலை **5-30** மணிக்கு

*தலைவர்:* இரா. சாரங்கபாணி

*பேசுபவர்:*

ஈ. வெ. கி. சம்பத்

★

**குளித்தலை**

வ. உ. சி. சதுக்கத்தில்

**5—12—54** மாலை **6** மணிக்கு

*தலைவர்:* க. முத்து

*பேசுவோர்:*

இரா. சு. தங்கப்பழம்

அ. பெ. தர்மலிங்கம்

சீ. மு. வளர்மதி

★

**மாயூரம்**

**5—12—54** ஞாயிறு மாலை

நகரப் பூங்காவில்

*தலைவர்:* து. காசிநாதன்

*பேசுவோர்:*

இரே. இளம்வழுதி

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

என். கிட்டப்பா

**சென்னை**

கோகலே மண்டபத்தில்

சிறப்புச் சொற்பொழிவு

**5—12—54** காலை **9** மணிக்கு

*தலைவர்:* டி. என். இராவணன்

*பேசுவோர்:*

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கே. ஆர். இராமசாமி

ஏ. கே. வேலன்

*நன்கொடை அணு* 8, 4

**சென்னை**

முத்தியாலுப்பேட்டை,

சாலைவிஞயகர் கோயில் தெருவில்

**5—12—54** மாலை **5½** மணிக்கு

*தலைவர்:* டி. வி. நாராயணசாமி

*பேசுவோர்:*

மு. கருணநிதி

முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

எஸ். எஸ். ராசேந்திரன்

### சொற் பயிற்சிக் கூட்டக்

4-12-54 மாலை 6-30 மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் இளந்தென்றல் தலைமையில் 'கல்வியும்-அரசாங்கமும்' என்னும் பொருள் பற்றி நடைபெறும் சொற் பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசுவர்.

### வள்ளுவர் வள்ளலார் போட்டிகள்

வள்ளுவர் வள்ளலார் போட்டிகள், மாணவர் மன்றச் சார்பில், 4-12-54 பிற்பகல் 1-30 மணிக்கு சென்னை, மயிலை கடை வீதியில் உள்ள நகராண்மைக் கழகப் பெண் பள்ளியிலும், 5-12-54 பிற்பகல் சென்னை, அம்மன் கோயில் தெருவிலுள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியிலும் நடைபெறும்.

### பொதுக் கூட்டம்

5-12-54 மாலை 6 மணிக்கு, கோவை, காந்தி சவுக்கத்தில், கோவை திராவிட பஞ்சாலை தொழிலாளர் பொதுக்கூட்டம் தோழர் இரா. சுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், எஸ். ஏ. ராசமாணிக்கம், அ. கண்ணன் ஆகியோர் பேசுவர்.

### திருச்சி 20-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்கட்கு

5-12-54 காலை 10 மணிக்கு, திருச்சி 20-வது வட்ட தி. மு. கழக கிளையில், கழக செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். செயற் குழு உறுப்பினர்கள் தவறாது வரக் கோரப்படுகிறார்கள்.

### 'அந்தமான் கைதி'—நாடகம்

5-12-54 இரவு 9-30 மணிக்கு, சின்ன சேலம் நாடகக் கலை அரங்கில், ஊர்கல இளைஞர் கழக வளர்ச்சி நிதிக்காக, தோழர் பி. ரத்தினசாமி தலைமையில், இளைஞர் கலா மன்றத்தார் அளிக்கும் 'அந்தமான் கைதி' நாடகம் நடைபெறும்.

### திருமணங்கள்

5-12-54 காலை 7-30 மணிக்கு, சென்னை, பல்லாவரம் அடுத்த ஆனகாபுத்தூர் கிராமத்தில், தோழர் ப. ராஜு-தோழியர் மீனாட்சி அம்மை திருமணம் தோழர் சின்னசாமி தலைமையில் நடைபெறும். தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் 'திருமணம்' குறித்துப் பேசுவார்.

5-12-54 இரவு 7 மணியளவில், கடையநல்லூர், மணமகன் இல்லத்தில் தோழர் சுப்பையா-தோழியர் மாடத்தி என்ற மல்லிகா திருமணம் நடைபெறும். தோழர்கள் கே. வி. கே. சாமி, ப. புகழேந்தி, ஆ. திராவிடமணி ஆகியோர் பேசுவர்.

# நடிகர் குழுவினர் வீட்டில்.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்குகொள்ளுபவர் எனக் கூறப்படும் மதுரை ஏ. வைத்தியனுத அய்யர் மகன் வழக்கறிஞர் வி. சங்கரன் என்பவரும் இந்து மகாசபையினர் திருவிளையாடலில் முதல் வரிசையில் இருந்தார். அவருக்கும் கல்லடி கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

கொட்டகை முன்பாக உள்ள நடைபாதையில் இரு இளைஞர்கள் உள்ளிட்டு எட்டு நபர்கள், குருதி கொட்டும் காயங்களுடன் கிடந்தனர்.

*போலீஸ் அதிகாரிகள் தடியடிப் பிரயோகத்திற்குக் கட்டளை இட்டனர்.*

மகா சபையினர் கல்லெறித் திருவிளையாடலின் விளைவாக 24 நகர போலீஸ், 25 ஆயுதப் போலீஸ் படையினர் காயப்பட்டுள்ளனர். ஒரு சார்ஜெண்ட், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு சப்-மாஜிஸ்திரேட் ஆகியவர்களும் காயம் பட்டுள்ளனர்.

டிக்கெட் வாங்கிக்கொண்டு கொட்டகைக்குள் சென்றவர்களை சோதித்ததில் இருவரிடமிருந்து கூரிய பிச்சுவா கைப்பற்றப் பட்டதாகவும், அவர்களும் போலீஸ் பாதுகாப்பில் உள்ளதாகவும் தெரியவருகிறது.

*மதுரையில் எம். ஆர். இராதா அவர்களுடைய நாடகக் கழகத்தினரால் நடத்தப் பெற்று வரும் வால்மீகி 'இராமாயண' நாடகத்தைத் தடுப்பதற்காக இந்துமகா சபையினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.*

நாடகம் நடந்துக்கொண்டிருக்கும் பொழுது, நாடகக் குழுவினர் தங்கியுள்ள விட்டிற்குள் சிலர் நுழைந்து, அங்கிருந்த செம்பு, பித்தளைப் பாத்திரங்களைக் களவாடினர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

நாடகத்துக்கு அனுமதி தரக் கூடாதென நகர மாஜிஸ்திரேட்டிடம் தரப்பட்ட மனுவை, அவர் நிராகரித்திருக்கிருர்.

நடு இரவில் ரோந்து வந்து கொண்டிருந்த போலீஸ்காரர் ஒருவரும் தாக்கப்பட்டிருக்கிருர்.

மதுரை அம்மன் சன்னதியில் வெற்றிலை பாக்குக் கடை வைத்துள்ள ஒருவரையும், அத்தெருவில் கலாம் புரிந்த கூட்டத்தவர், கத்தியால் குத்திக் காயப்படுத்தினர் எனத் தெரிகிறது.

இதற்கு முன், மாலை சுமார் 7–30 மணியளவில், மேற்கு ஆவணிமூல வீதியில், 'ஏதோ கலகம்,' என்று ஒரு வதந்தி வெளிவரவே அங்கிருந்த கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன. அத்தெருவிலிருப்பவை எல்லாம், பெரும்பாலும், தங்க, வெள்ளி நகைக் கடைகளேயாகும்.

நாடகம் முடிவுற்றதும், நாடகம் பார்த்துவிட்டுத் திரும்பிய மக்களை, ஆங்காங்கு மறைந்திருந்த சிலர் தாக்க ஆரம்பித்திருக்கின்றனர். போலீசார் தாக்கியவர்களை விரட்டிவிட்டு, மக்களுக்குப் பாதுகாப்புத் தந்திருக்கின்றனர். மேலும், பொது மக்களை நான்கைந்து பேராகச் சேர்ந்து கூட்டம் கூட்டமாக வீடு போய்ச் சேருமாறு கேட்டுக்கொண்டனர்.

நகரம் முழுவதும் உள்ள முக்கிய வீதிகளிலெல்லாம் போலீசார் பந்தோபஸ்து புரிந்து வந்துள்ளனர்.

காயம்பட்டவர்கள் எல்லோருக்கும் சர்க்கார் மருத்துவமனையில் சிகிச்சை தரப்பட்டது. ஐந்து பேர்கள் மருத்துவமனையிலேயே

(தொடர்ச்சி 2-ம் கலம் பார்க்க)

# அமைச்சரின் இந்தி மொழி உச்சரிப்பு

## பாராளுமன்ற உறுப்பினர்கள் நகைத்தனர்

*இந்தி மொழி அறியாதது உறுப்பினர்கள் குற்றமாம்*

புதுடில்லி, டிச. 2—

இந்திய மக்கள் சபையில் உதவி தொழில் அமைச்சர் அபித் அலி கேள்வி ஒன்றுக்கு இந்தியில் பதில் அளிக்கையில், இந்தி சொற்களை உச்சரிக்க அவர் மிகவும் தடுமாறினுர் என்றும், அதைக் கண்டு உறுப்பினர்கள் பலர் சிரித்தார்கள் என்றும் தெரிகிறது.

உறுப்பினர்கள் சிரித்தது, தன் மனதிற்கு வேதனையாக இருக்கிறது என்றும், உறுப்பினர்கள் அரசியல் சட்டத்தை மதிக்க வேண்டுமென்றும் சபைத் தலைவர் மாவ்லங்கர் கூறினுர்.

அமைச்சரின் பதிலை உறுப்பினர் ஒருவரால் புரிந்துகோள்ள முடியவில்லை என்ருல், அது உறுப்பினர்களின் குற்றந்தான் என்றும், அரசியல் சட்டம் ஐந்தாண்டுகளாக அமுல் நடத்தப்படுகிறது என்றும், ஆகவே, இந்தியைப் புரிந்துகொள்ள சிறு முயற்சியாவது எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் கூறினுர்.

குருபாதசாமி ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினுர்.

அமைச்சர் அளித்த பதிலின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று தரப்பட வேண்டுமென்ருர்.

இதற்கு சபைத் தலைவர் பதில் அளிக்கையில், உறுப்பினர் ஒருவர் ஆங்கிலம், இந்தி புரியாதவராக இருந்தால்தான் மற்ற மொழிகளில் மொழிபெயர்க்க அனுமதித்துள்ளதாகவும், ஆனுல், ஆங்கிலமும் தெரியாத உறுப்பினர்கள் இருக்கிருர்கள் என்றும், இந்தியில் அளிக்கப்பட்ட பதிலுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு கேட்பது அரசியல் சட்டத்தை மதிப்பதாகாது என்றும் கூறினுர்.

தோழர் அவினுசிலிங்கம்செட்டியார், ஆங்கில மொழிபெயர்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்தினுர்.

அவரது கோரிக்கைக்கு பதில் அளிக்கையில், இதுவரையில், தான் இதுபோன்ற கோரிக்கைகளை அனுமதித்துவந்ததாயும், இப்போது இந்தியைப் பரப்ப ஊக்கமளிக்கும் நேரம் வந்துவிட்டதென்றும் கூறி, தேவைப்பட்டால் உறுப்பினர்கள் சபைக் காரியதரிசியிடமிருந்து ஆங்கில மொழிபெயர்ப்பின் பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், இந்தி புரியவில்லை என்ற காரணத்திற்காக, தன் மூலமாக உறுப்பினர்கள் இச்சலுகையைப் பெற இயலாது என்றும், சபைத் தலைவர் மாவ்லங்கர் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை), வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணதுரை, எம் ஏ.